மாண்புமிகு திரு. க. அன்பழகன்: எந்த ஆலோசனையும் உறுதியாகக் கைவிடப்படுவதோ, உறுதியாக ஏற்றுக்கொள்ளப்படுவதோ இல்லை. காலத்திற்குக் காலம் தேவைக்கும் வாய்ப்புக்கும் ஏற்ப கருத்து மாறக்கூடும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவச் செலவு

**36 வினா—திரு. என். கிட்டப்பா: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—*

1972-73-ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களின் மருத்துவச் செலவுக்காக அரசு செலவிட்ட தொகை எவ்வளவு?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: சட்டமன்ற உறுப்பினர்களின் மருத்துவச் செலவுகளை அவர்களுக்குத் திருப்பித் தருவதற்காக (re-imbursement) அரசு 1972-73-ஆம் ஆண்டில் ரூ. 10,426-15 செலவிட்டுள்ளது. சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு மருத்துவ மனைகளில் இலவச சிகிச்சை அளிக்கப்படுவதால், அது குறித்து செலவிடப்பட்டுள்ள தொகையை கணிக்க இயலவில்லை.

கிராமக் குடிநீர்ச் சிறப்புத் திட்டம்

**37 வினா—திரு. கா. வேழவேந்தன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—*

தமிழ்நாடு முழுவதும் எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வழங்கச் சிறப்புத் திட்டம் உள்ளதா?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: ஆம். குறைந்த தூரத்தில் குடிநீருக்காக நிச்சயமான ஊற்றுத்துறை தற்சமயம் இல்லாத கிராமங்கள்—தொத்துநோய் நிலவிவரும் கிராமங்கள்—ஆதிவாசிகள்—அரிசனங்கள் முதலான எளிய சமூகத்தினர் குடிநீர்ப் பற்றுக்குறையுடன் வசிக்கும் கிராமங்கள் இந்த மூவகைக்கிராமங்கள் யாவற்றிற்கும் குடிநீர் வழங்குவதற்காக "விரைவுச் செயல் முறைக் (Accelerated programme) கிராமக்குடிநீர்ச் சிறப்புத் திட்டம்" ஒன்று நிறைவேற்றப்பட்டு வருகிறது.